
# இவர் காஞ்சி மடத்து அண்ணா

அந்தப் பையனுக்கு சுமார் 20 வயது இருக்கும். சென்னையில் பி.ஏ. ஹானர்ஸ் படிக்கும் மாணவன். அப்பா, அம்மாவுடன் காஞ்சி மஹாபெரியவாளை தரிசனம் செய்ய வந்திருந்தான். அவனுக்குப் பெரியவா தரிசனம் அதுவே முதல் தடவை.

பெரியவா அன்று முகாமிட்டிருந்தது ஓரிருக்கை என்ற ஊரில். வழக்கம்போல ஒரு மாட்டுக் கொட்டடியில் தங்கியிருந்தார். அப்பா, அம்மாவுடன் உள்ளே நுழைந்த பையனுக்கு மாட்டுச் சாணி வாசனை மனதை என்னவோ செய்தது. பெரியவா தரிசனம் என்பதால் சட்டை, பனியனைக் கழட்டிவிட்டு உள்ளே நுழையவேண்டிய கட்டாயம். அதைவிடப் பெரிய சோகம், அவரை நமஸ்காரம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்தான். அப்போது அவனது மார்பு கீழே கிடந்த வைக்கோல்களின்மேல் உரசியதால் ஒரே குறுகுறுப்பு. அவன் மனது பூரா ஒரே வெறுப்பு. பி.ஏ. ஹானர்ஸ் படிக்கும் தனக்கு இப்படி ஒரு கோவணாண்டிப் பரதேசியை வந்து நமஸ்காரம் செய்யவேண்டிய தலையெழுத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட பரதேசிகள் காலில் வீழ்ந்து வணங்கும் காட்டுமிராண்டிகளைக் கொண்ட இந்தியா எப்படி முன்னேறும் என்பதே அன்றைய தினம் அவனுக்குள் எழுந்த மிகப்பெரிய கேள்வி.



குறுகுறுப்பும் வெறுப்பும் பையனுக்குத்தான். பெரியவாளோ, வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல என்று சொல்வார்களே, அதுபோலத்தான் பெரியவா பார்வை அவனை ஈட்டியால் குத்துவது போல இருந்தது. 'இந்தப் பரதேசிக்கு நாகரிகம்கூடத் தெரியாதா?' அவரது பார்வை அவனை வெறுப்பின் உச்சிக்கே இட்டுச் சென்றது.

அதற்கு மேலும் அங்கே நிற்கப் பிரியமில்லாமல் மாட்டுக் கொட்டகைக்கு வெளியே வந்து நின்றான். பெரியவா பார்வை தன்மீது படாத மாதிரி இடத்தில் நின்றுகொண்டான். என்ன செய்வது, அப்பா, அம்மா கிளம்பும்வரை அவன் அங்கேதானே இருந்து தொலைக்க வேண்டும்?

ஆனால் பெரியவா பார்வையில் மாற்றம் இல்லை. அவன் இருந்த திசையையே பார்த்துக்கொண்டிருந்தார். அவ்வப்போது பையன் உள்ளே எட்டிப் பார்ப்பான். பெரியவா அவனையே பார்த்துக்கொண்டிருப்பார். தரிசனத்துக்காக வந்திருந்த அனைவருக்கும் ஒரே ஆச்சரியம். 'இந்தப் பையனுக்கு எப்பேர்ப்பட்ட பாக்கியம், பெரியவா இவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாரே!' என்று. ஆனால் அவனோ வெந்தணலில் நின்றுகொண்டிருந்தான்.

ஒருவழியாக, சில மணி நேரத்துக்குப்பின் அப்பா, அம்மா கிளம்பினார்கள். தப்பித்தோம், பிழைத்தோம் என்று அவனும் உடன் கிளம்பினான். ஆனாலும் அவன் மனதில் ஏற்பட்ட வெறுப்பு கூடிக்கொண்டே சென்றது. இரவு படுக்கையில் விழுந்த பின்னர் அது இன்னும் கூடியது. தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்த அவன் எப்போது தூங்கினானோ, தெரியாது.

காலை எழுந்தால், அவனது மனதில் இனம்தெரியாத பூரிப்பு. 'எனக்கு எல்லாமே பெரியவாதான். அவர் என்ன சொல்கிறாரோ அதுதான் எனக்கு வேதவாக்கு.' அவன் நெஞ்சு முழுவதிலும் நிறைந்து இருந்த ஒரே எண்ணம் இதுதான். அன்று முதல் பசுவைத் தேடிச்செல்லும் கன்றைப்போலப் பெரியவாளை நாடி அடிக்கடி செல்ல ஆரம்பித்தான். காஞ்சிபுரம் மட்டுமல்ல, அவர் எந்த ஊரில் இருந்தாலும் சரி, பெரியவாளைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு வந்துவிட்டால் போதும், உடனே அவர் இருக்கும் இடத்தை நோக்கி சிட்டாய்ப் பறந்துவிடுவான்.

***

கொஞ்ச வருடங்கள் கடந்தாச்சு. இப்போது அந்தப் பையன் இளைஞனாகிவிட்டார். ஒரு பிரபல வாரப்பத்திரிகையில் உதவி ஆசிரியர் உத்யோகம். தமிழகம் எங்கும் நன்கு அறியப்பட்ட எழுத்தாளராகவும் ஆகிவிட்டார். இருப்பினும் பசு-கன்று உறவு அப்படியே தொடர்கிறது.

ஆனால் இந்தப் பொல்லாத பெரியவா திடீரென காஞ்சியை விட்டுக் கிளம்பிவிட்டார். பல ஆண்டுகள் தொடர்ந்து சஞ்சாரம். எந்த ஊரில் இருக்கிறார் என்ற தகவல் யாருக்கும் தெரியாது. யாராவது அவரைப் பார்த்துவிட்டுத் திரும்பினால், அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு அந்த ஊருக்குப் போய்ப் பார்க்கவேண்டும். நாம் போகும்போது அவர் அங்கே இருப்பார் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது. அவர் எந்தத் திசையில் சென்றார் என்பதை ஆங்காங்கே மக்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு அவரைத் தேடிக் கண்டுபிடித்துத் தரிசனம் செய்யவேண்டும்.

இளைஞனின் பெரியவா பிரேமைக்கு இதெல்லாம் இடைஞ்சலே இல்லை. அவர் வேலைபார்த்த அலுவலகத்திலோ லீவு கொடுப்பதுடன் சந்தோஷமாகக் காரும் கொடுத்து அனுப்புவார்கள். எனவே இளைஞனும் நினைத்தபோதெல்லாம் பெரியவா முன் ஆஜராகிவிடுவார்.

இதுபோல ஒரு சந்தர்ப்பம். பெரியவா ஆந்திர மாநிலத்தில் ஒரு சிற்றூரில் இருந்தார். அவர் தங்கியிருந்த இடத்தை ஒருவழியாகக் கண்டுபிடித்து வந்துசேர்ந்தார் நமது இளைஞர். பெரியவா இருந்தது ஊருக்கு வெளியே ஒரு பாழடைந்த கட்டிடத்தின் உள்ளே. சுமார் மூன்று மணிநேரம் இளைஞன் வெளியே காத்திருக்கிறார். பெரியவா வெளியே வருகிறார். சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறார், நமது இளைஞர்.

'என்ன விஷயம்? எதுக்கோசரமா வந்தே?' அதிகாரத்துடன் கேட்கிறார் பெரியவா.

'ஒண்ணுமில்லே. என்னால பெரியவா பார்க்காம இருக்க முடியல.' இது இளைஞரின் உணர்ச்சிபூர்வமான பதில்.

‘ஓ, இந்த உடம்பு’ தனது இரு கரங்களாலும் தனது உடம்பைச் சுட்டிக்காட்டியபடி கேட்கிறார் பெரியவா, ‘இந்த உடம்புதான் பெரியவாளோ?’

விருட்டெனத் திரும்பிய பெரியவா, இளைஞனது பதிலுக்குக் காத்திராமல் மீண்டும் அந்தப் பாழடைந்த கட்டிடத்துக்குள்ளே சென்றுவிடுகிறார்.

ஆர்வ மேலீட்டால் அவ்வளவு தூரம் ஓடிவந்த இளைஞனுக்கு எந்தவித ஏமாற்றமும் ஏற்படவில்லை. மாறாக அவர், தனக்குள் ஏதோ இழை அறுந்துபோனதுபோல உணர்கிறார். அதன்பிறகு அவர் பெரியவா தரிசனத்துக்காக ஏங்கியதே இல்லை. ஏதாவது பணிநிமித்தமாக அவரைப் போய்ப்பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டால் போவதுண்டு, ஆனால் பெரியவாளைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் எழுவதே இல்லை.

❖❖❖

இளைஞர் இப்போது பெரியவராகிவிட்டார். தமிழகம் மட்டுமல்ல, அகில உலக அளவில் அறியப்பட்ட தமிழ் எழுத்தாளராகத் திகழ்கிறார். பல்வேறு இந்திய மொழிகளில் மட்டுமல்ல, பல்வேறு வெளிநாட்டு மொழிகளிலும் அவரது படைப்புகள் மொழிபெயர்ப்பாகி உள்ளன. அதுமட்டுமல்ல, ஆன்மிக எழுத்தாளர்களில் அவர் ஒரு ஜாம்பவான் என்றே சொல்லலாம். காரணம், அவரது எழுத்து அதாரிடியாக மதிக்கப்படும் நிலை.

மகா பெரியவா என்றதுமே இவரது பெயரும் கூடவே நினைவுக்கு வரும் என்னுமளவு, பெரியவா பற்றிய சம்பவங்கள், அவரது உபதேசங்களைத் தொகுத்து எழுதியிருக்கிறார்.

இன்னும் சில மாதங்கள் கடந்தால் அவருக்கு சஷ்டியப்தபூர்த்தி. சரியாக இந்தச் சமயத்தில்தான் அந்தச் செய்தி வருகிறது. ‘நடமாடும் தெய்வம் மஹாபெரியவா ஸமாதி அடைந்துவிட்டார்’ என்பதே அந்தச் சேதி. பக்தர்களுக்கு அது பேரிடியாக இருந்தது.

நமது எழுத்தாளருக்கோ தொலைபேசி அழைப்புகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆனால் அவரிடமோ எந்தவித மாற்றமும் இல்லை, சலனமும் இல்லை.

ஒரு பக்தை ஓடோடி வருகிறார். எழுத்தாளர் முன்னே அமர்ந்து கதறுகிறார். ‘பெரியவா இப்படி நம்ம தலையில இடியைப் போட்டுட்டாளே! எங்களை மாதிரி ஜனங்களாலேயே தாங்க முடியலயே, பாவம் நீங்க எப்படி இந்த துக்கத்திலேர்ந்து மீண்டு வருவேள்?’ என்கிறார். அவர் சொல்வதைப் புன்னகையுடன் கேட்டுக்கொண்டு இருக்கிறார், நமது எழுத்தாளர் .

இறுதியாக அந்தப் பெண்மணி, ‘வாங்கோ, என்னோட கார்லயே காஞ்சிபுரம் போகலாம்’ என்று அழைக்கிறார். புன்னகை மாறாத எழுத்தாளர் தீர்மானமாகச் சொல்கிறார்: ‘அம்மா, என்னைப் பொருத்தவரையில் பெரியவா அந்த உடம்பு இல்லை. அவர் போகவும் இல்லை. அதனால நான் இப்போது அங்கே வர விரும்பவும் இல்லை. காரணம், நீங்கள் எல்லோரும் அங்கே அழுதுகொண்டு இருப்பீர்கள், எனக்கு அந்தக் காட்சியைப் பார்த்தால் சிரிப்புதான் வரும். அந்த இடத்தில் சிரிப்பது பித்துக்குளித்தனமாகத்தான் காட்சிதரும். இது தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். எனவே நான் அங்கே வருவதற்கில்லை. நீ மாத்திரம் கிளம்பு.’

❖❖❖

இந்தப் பிரபல எழுத்தாளர்தான் ஸ்ரீ ரா. கணபதி.

இவர், கடலூரில் ராமச்சந்திரன்-ஜயலட்சுமி தம்பதியருக்கு மகனாக அவதரித்தது 1935 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி. அன்றைய தினம் விநாயக சதுர்த்தி. எனவேதான் கணபதி என்ற திருநாமம். இந்தப் பெயர் அவருக்கு வேறு ஒரு வகையிலும் பொருத்தமானதே. விநாயகப் பெருமானது திருக்கரங்கள் வ்யாச பாரதம் முழுவதையும் எழுதின. இவரது திருக்கரங்கள் தெய்வத்தின் குரலை எழுதின. ரா. கணபதி தனது வாழ்நாளில் எழுதிக் குவித்த பக்கங்களை எண்ணிக்கையில் அடக்க முடியாது

இவருக்கு உடன்பிறப்பு ஒரே ஒரு சகோதரிதான். பெயர் த்ரிபுர ஸுந்தரி. என்றாலும், அம்மா வழியிலும் சரி, அப்பா வழியிலும் சரி, ஒன்றுவிட்ட சகோதரர்கள் நிறைய பேர். அவர்கள் அனைவராலும் ‘அண்ணா, அண்ணா’ என்று அழைக்கப்பட்டார். பிற்பாடு அவரை நாடிவந்த ஆன்மிக அன்பர்களும் அவர்களைப் போலவே ‘அண்ணா’ என்று அழைக்கவே அவரது பெயர் அண்ணா என்றே ஆகிவிட்டது.

ரா. கணபதி என்ற பெயர் பிரபலமாக இருந்தாலும், அவர் காஞ்சிமட வட்டாரங்களிலும், சாயி பக்தர்களின் மத்தியிலும் அண்ணா என்றே அறியப்பட்டவர். ஆம், ராமகிருஷ்ண மடத்துக்கு ஓர் அண்ணா இருந்ததுபோல இவர் காஞ்சி மடத்து அண்ணா. இந்தப் பெயரும் அவருக்கு மிகவும் பொருத்தமானதே. காரணம், அந்த அண்ணா, ஸநாதந தர்மத்தின் அதாரிடியான மந்த்ரங்களைப் புத்தக வடிவில் கொண்டுவந்து நிகழ்கால, வருங்கால சந்ததியினருக்கு ஆவணங்களாக விட்டுச் சென்றார். இந்த அண்ணா, தர்ம சாஸ்த்ர விஷயங்களில் அதாரிடியாகத் திகழும் தெய்வத்தின் குரலைத் தொகுத்துத் தந்தார். அது தவிர, பெரியவா, சாயி இருவரது வாழ்க்கைச் சம்பவங்களையும் ஏராளமான நூல்கள் வாயிலாகப் பதிவுசெய்து நிகழ்கால, வருங்கால சந்ததியினருக்கான ஆவணத் திரட்டாக விட்டுச் சென்றுள்ளார்.

கணபதி அண்ணாவின் எழுத்துக்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது வகை, தெய்வத்தின் குரல். மேம்போக்காகப் பார்த்தால், மஹாபெரியவா பேச்சுக்களை ஒலிநாடாவில் பதிவுசெய்து, எழுதி, நூல்வடிவில் கொண்டுவரப்பட்டதுதான் தெய்வத்தின் குரல் என்று எண்ணத் தோன்றும். ஆனால், அண்ணா டேப் ரிகார்டர் போன்ற கருவிகளைப் பயன்படுத்தியதே இல்லை. பெரியவாளின் எல்லா உரைகளுமே அவரால் அவ்வப்போது எழுதிவைக்கப்பட்டவை. அதுமட்டுமல்ல, தெய்வத்தின் குரலில் உள்ள எந்த அத்யாயமும், பெரியவாளது ஒரே ஒரு உரை அல்ல, மாறாக, ஒவ்வோர் அத்யாயமுமே ஒரு தொகுப்புதான். ஆம், ஒரே விஷயத்தைப் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் பெரியவா பேசிய கருத்துக்களைத் தொகுத்து ஒரே அத்யாயமாக அண்ணா உருவாக்கினார். ஒவ்வோர் அத்யாயத்துக்கும் அவர் எவ்வளவு உழைத்திருப்பார் என்பது கற்பனைக்கு எட்டாத விஷயம்.

அவர் இவ்வளவு மெனக்கிட்டு உழைத்தது எவ்வளவு பெரிய உண்மையோ, அதைவிடப் பெரிய உண்மை, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர் தனது குறிப்புக்களைப் பயன்படுத்தவே இல்லை என்பது.

அவரது உழைப்பும் ஞாபகசக்தியும் ஒருபுறம் இருந்தாலும், தனது உழைப்பில் உருவான நூல் என்று தெய்வத்தின் குரலைப் பற்றி அண்ணா ஒருபோதும் சொன்னதே இல்லை. தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதி எழுதிக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு தடவை என்னிடம் அவராகவே சொன்ன விஷயம்: ‘நானா எழுதறேன்? அதுவா வர்றது.’

அண்ணா எழுத்தின் இரண்டாவது வகையும் கருத்துக்களின் தொகுப்புதான். பெரியவா, சாயிபாபா முதலியோரின் கருத்துக்களைத் தொகுத்து உருவாக்கப்பட்ட நூல்கள் இந்த வகை. சொல்லின் செல்வர், அறிவு அறுபது முதலிய நூல்கள் இந்த வகையைச் சாரும். சில மொழிபெயர்ப்புகளும் உண்டு.

மூன்றாவது வகை முழுக்க முழுக்க அண்ணாவின் நூல்கள். இந்த நூல்களின் பட்டியல் கணக்கில் அடங்காதது. மகாபெரியவா, சாயிபாபா, ரமணர், ராமகிருஷ்ணர், சாரதாதேவீ, விவேகாநந்தர் முதலியோரைப் பற்றி ஏராளமான நூல்கள் எழுதியுள்ளார். இவை தவிரவும் அம்பாள், ஹநுமார் உட்பட ஏராளமான தெய்வங்களைப் பற்றிய நூல்களும் யோகி ராம்சுரத்குமார், ஸ்வயம்பிரகாசர், மாதா அம்ருதாநந்தமயி உட்பட ஏராளமான மகான்களைப் பற்றிய கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். கட்டுரைகளில் பல நூல்வடிவில் வந்துள்ளன. வராதவையும் கணக்கற்றவை.

அண்ணாவின் மொழிநடை புரிந்துகொள்வதற்குக் கொஞ்சம் கஷ்டமானதாக இருக்கும். ஆனால் ஆன்ம ஸாதகர்களுக்குத் துணைபுரியும் வல்லமை அந்த எழுத்துக்கு உண்டு. குறிப்பாக, ‘நவராத்திரி நாயகி’ நூலின் ‘முகவுரை என்கிற முக்கிய உரை’ ஸாதகனின் தேடல் வேட்கைக்கு இடப்பட்ட அறுசுவை உணவு. அதேநேரத்தில் மகான்களின் வாழ்க்கைச் சம்பவங்களை அவர் வர்ணனையில் படிக்கும் போது ஒரு நாஸ்திகரின் உள்ளத்தில்கூட பக்தி பொங்கும்.

அண்ணா எழுத்தின் நான்காவது வகை கீர்த்தனைகள். ஸ்வயமாக அவரே எழுதிய கீர்த்தனைகளும் உண்டு. மொழிபெயர்ப்புகளும் உண்டு. சில மீரா பஜன்களையும் ‘மைத்ரீம் பஜத’ பாடலையும் (மஹாபெரியவா இயற்றிய ஸம்ஸ்க்ருத கீர்த்தனை. ஐ. நா. ஸபையில் எம். எஸ் அரங்கேற்றியது.) தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவை அனைத்தும் மூலப் பாடலின் அதே ராகத்தில், அதே அமைப்பில் இருப்பவை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணா எழுதிய கீர்த்தனைகளும் பிரபலம்தான். ஆனால் எனக்கு அவை பற்றித் தெரியாது. அவருக்கு இரண்டு வயது ஆகும்போதே எந்த ஒரு பாடலின் ராகத்தையும் கண்டறியும் திறன் அவருக்கு வாய்க்கப்பெற்றது. ஐந்தாவது வயதில் எந்த ராகத்தையும் ஹம் பண்ணுமளவு ஸங்கீத அறிவு தானாக வாய்த்தது. அவருக்கு யாரும் ஸங்கீதம் சொல்லித்தரவில்லை. இதுபற்றி அண்ணாவே என்னிடம் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்.

அண்ணாவின் எழுத்துப்பணிகளுக்காக அவருக்கு எத்தனையோ பாராட்டுக்கள், புகழ்மாலைகள் கிடைத்தன. ஆனால் அவை எதையும் அவர் பொருட்படுத்தவில்லை. சில பெரிய அமைப்புகள் அளித்த பாராட்டுப் பத்திரங்களை மட்டும் தவிர்க்க முடியாமல் பெற்றுக்கொண்டார். தான் அவற்றை ஏற்க மாட்டேன் என்று சொன்னால் அது சம்பந்தப்பட்ட அமைப்பின் கவுரவத்துக்குக் குந்தகம் விளைவித்துவிடலாம் என்ற எண்ணம்தான் இதற்குக் காரணமே தவிர, தனக்குக் கிடைத்த பாராட்டாக அவர் இவற்றைக் கருதவே இல்லை.

அதேநேரத்தில் அவர் தனக்குக் கிடைத்த மிக உயர்ந்த பாராட்டு என்று இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டுள்ளார். முதலாவது, அவர் கல்கியில் பணிபுரிந்தபோது கிடைத்தது. கல்கியில்தான் அவரது முதல் தொடர் வெளிவந்தது. அதுதான் ஜயஜய சங்கர (ஆசார்யாளின் சரிதம்). பிற்பாடு அது நூல் வடிவில் வெளியானது. அந்த நூலை வெளியிட்டுப் பேசிய சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, அண்ணாவை 'My colleague Ra. Ganapati' (என் உடன் பணிபுரியும் ரா. கணபதி) என்று குறிப்பிட்டார். ‘அப்பேர்ப்பட்ட மகான் என்னைத் தன்னுடன் பணிபுரிபவர் என்று சொன்னாரே, எவ்வளவு பெரிய பாக்கியம்’ என்று அண்ணா பலமுறை என்னிடம் கூறியிருக்கிறார்.

இரண்டாவது பாராட்டு, ராமகிருஷ்ண மடத்து அண்ணாவிடம் இருந்து வந்தது. அன்னையார் பற்றிய தொடர் கல்கியில் வந்தபோது அதைப் பாராட்டி ராமகிருஷ்ண மடத்து அண்ணா எழுதிய கடிதம் கல்கியில் வெளியானது. இதைத்தொடர்ந்து கணபதி அண்ணா அவரை நேரில் சந்தித்தபோது அவர், ‘Intuitive ஆப் புரிஞ்சுண்டு அன்னையார் பற்றி எழுதறயாமே?’ என்று கேட்டு இவரை ஆரத் தழுவிக்கொண்டார். இந்தப் பாராட்டை அண்ணா தனது எழுத்துக்கான அங்கீகாரமாக நினைத்துக் கொண்டாடினார். அன்னையார் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைத் தனக்குள் காட்சியாக நேரில் பார்த்து அநுபவித்ததைப் பற்றியும் என்னிடம் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்.

இதெல்லாம் ஒருபுறம் இருந்தாலும் அவர் தனது எழுத்துப் பணியை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை என்பதுதான் உண்மை. அவர் பிரஹ்மசாரி. சாயிபாபா அவரை ‘நைஷ்டிகீ’ என்றே குறிப்பிட்டுள்ளார். அண்ணா திருமணம் செய்துகொள்ளாததற்குக் காரணம் எழுத்துப்பணி என்றுதான் நிறைய பேர் நினைக்கிறார்கள். ஆனால் உண்மைக் காரணம், அவருக்கு இருந்த துறவற நாட்டம்தான். எனினும், பலமுறை முயன்றும் மஹாபெரியவா அவரது துறவறத்துக்கு அநுமதி தரவில்லை. எனவே அண்ணா எழுத்துப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றிவந்தார். எழுத்துப்பணியை அவர் தனது கடமையாகக் கருதி கர்மயோகம் புரிந்துவந்தார் என்பதுதான் சரியான விளக்கமாக இருக்கும். காரணம், அந்தப்பணியினால் அவருக்கு எந்தவித ஆதாயமும் இருந்ததாகத் தெரியவில்லை. அவரது எழுத்துக்களால் ஈர்க்கப்பட்ட எத்தனையோ பேர் அவரை அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தனர். அண்ணாவோ தனிமை விரும்பி. அவருக்குப் பார்வையாளர்களின் வரவு இடையூறாகத்தான் இருந்தது. எனினும் அவர் அனைவரையும் வரவேற்கத்தான் செய்தார். ஒருபுறம் அவர் எழுதிக்கொண்டே இருந்தார். மறுபுறம், தன்னைப் பார்க்க வந்தவர்களிடம் பேசிக்கொண்டே இருந்தார். இத்தகைய உரையாடல்களின்போது அவர் பேசிய அனைத்துமே மகான்களைப் பற்றிய விஷயங்கள்தான். அதில் குறிப்பாகச் சொல்லப்பட வேண்டிய விஷயம், மஹாபெரியவா பற்றிப் பேசும்போதெல்லாம் அவரது பேச்சில் பக்தியும் பணிவும் தூக்கலாக இருக்கும். இதற்கு நேர்மாறாக, சாயிபாபா பற்றிப் பேசும்போதெல்லாம் ஸ்வாதீனம் அதிகம் இருக்கும்.

பார்வையாளர்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் இருந்ததால் அவரது எழுத்துப்பணி ரொம்பவுமே தடைபட்டது. வாரத்தின் மூன்று நாட்கள் மௌனவ்ரதம் இருக்கும்போதுதான் அவரால் எழுத முடிந்தது. தெய்வத்தின் குரல் ஏழாம் பாகத்துக்குப் பிறகு அவர் எழுதுவது பெருமளவு குறைந்துவிட்டது.

அவரது வாழ்வின் பெரும் பகுதி மௌனத்திலும் உபவாசத்திலும் கழிந்தது. த்யானத்தில் அமர்ந்ததுமே ஸமாதி நிலையை அடைந்துவிடுவார். ஆனால் அவர் த்யானத்தில் அமர்ந்த நிலையில் யாரும் அவரைப் பார்த்திருக்க முடியுமா என்பது ஐயம்தான். காரணம், அந்தச் சமயங்களில் அவர் பூட்டிய அறைக்குள் தனிமையில் இருப்பார். அவர் ஸமாதிநிலையில் இருந்தபோது ஒரு உபநிஷத்தை சப்தவடிவில் உணர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இது பெரியவா அநுக்ரஹத்தால் தனக்குக் கிடைத்த அநுபவம் என்று கூறியுள்ளார்.

ஒருபுறம் கர்மயோகமாக எழுத்துப்பணி, மறுபுறம் ஞானஸாதனைகள் என்று இருந்தாலும், அண்ணாவின் வாழ்வில் தூக்கலாக இருந்தது என்னவோ பக்திதான்.

ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பின் மஹாபெரியவா யாருக்கும் நேரடியாக மந்த்ரோபதேசம் செய்யவில்லை. அவரது ஸாந்நித்யத்தில் மடத்து மேலாளர்தான் உபதேசம் செய்வார். இந்தக் காலகட்டத்தில்தான் மஹாபெரியவா அண்ணாவுக்குக் கனவில் மந்த்ரம் கொடுத்தது. முன்பெல்லாம் அண்ணா, த்யான வேளைகளில் மட்டுமே ஜபம் செய்வதுண்டு. கடைசி பத்தாண்டுகளில் உடல் உபாதைகள் பெருகின. தாளாத வயிற்றுவலி, ஆஸ்டியோபோரஸிஸ் இரண்டும் சேர்ந்து அவர் உடல்மீது தங்கள் கைவரிசையைக் காட்டின. தனது ஒவ்வொரு சிறிய வேலைக்கும் பிறரைச் சார்ந்தே இருக்கவேண்டிய கட்டாயம். இதனால் த்யானம், மௌனம் ஆகியவை ஸாத்யமில்லாமல் போனது. இந்தக் காலகட்டம் முழுக்க மந்த்ர ஜபம்தான். ஜபத்தின்போது அவரது வாய் இறுக்கமாக மூடியிருக்கும், கண்கள் பாதி திறந்த நிலையில் இருக்கும், உள்ளே மந்த்ரம் ஜபிக்கப்படும் வேகத்துக்கு ஏற்றாற்போல் தலை இருபுறமும் ஆடிக்கொண்டு இருக்கும்.

அவருக்கு அன்புத் தம்பியர் ஏராளம். அவருக்குப் பணிவிடை புரிந்தவர்கள் கணக்கற்றோர். அவர்களில் சக்திவேல், ஆநந்த் இரண்டு பேர் குறிப்பிடத்தக்கவர்கள். இறுதி ஆண்டுகளில் மதுசூதனன் (மது), க்ருஷ்ணா பணிவிடை செய்துவந்தனர். அண்ணாவுக்கு ஒவ்வொரு பணியும் குறித்த நேரத்தில் நடைபெறவேண்டும். இதனால் தனக்குப் பணிவிடை செய்தவர்களை அவர் படுத்தி எடுத்த விதம் அலாதியானது.

அண்ணா ஸித்தியானது பிப்ரவரி 20 ஆம் நாள், சிவராத்ரி, இரவு சுமார் 7.25 மணியளவில். படுக்கையில் அமர்ந்தவாறு, ஜன்னல் வழியாக வெட்டவெளியையும், சுவற்றில் மாட்டியிருந்த ரமணர் படத்தையும் நிதானமாகப் பார்த்த வண்ணம், அருகில் இருந்த சக்திவேலிடம் இரண்டுமுறை bye சொல்லிவிட்டுக் கிளம்பினார். (‘இச்சா ம்ருத்யு’ என்பது இதுதானோ?) அவரது இறுதி மூச்சுக்குப் பின்னரும் கண்கள் லேசாகத் திறந்தவண்ணம் இருந்தன. அன்று இரவு மிகச்சில அன்பர்கள் மட்டுமே அண்ணாவின் பூத உடலுக்கு அருகே இருந்தோம். அண்ணா இப்போது நம்மிடையே இல்லை, மறைந்துவிட்டார் என்ற உணர்வு எங்களில் ஒருவருக்கும் ஏற்படவில்லை. எப்பொழுதும்போல் இயல்பான சூழ்நிலைதான் நிலவியது.

ஏற்கெனவே ஒல்லியான அவரது தேஹம், இறுதி நாட்களில் இன்னும் இளைத்தது. உடல் முழுக்க க்ஷீணமடைந்துவிட்ட பின்னரும் அவரது ப்ரக்ஞை அப்படியே இருந்தது. உணவைப் படிப்படியாகக் குறைத்து, கடைசி வாரத்தில் தினம் இரண்டு டீஸ்பூன்கள் திரவ ஆகாரம் மட்டுமே என்ற நிலைக்கு வந்துவிட்டார். அந்திமத்துக்குப் பிறகு என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் தெளிவாகச் சொல்லிவைத்திருந்தார். காரியம் செய்தது, அவரது ஒன்றுவிட்ட ஸகோதரர் துரை. அவரிடம் முதலில் தனக்கு எந்தக் கர்மாவும் தேவையில்லை என்று கூறினார், பின்னர் உடனேயே, தனது அக்கா மனது வேதனைப்படும் என்ற காரணத்தால் முழுக்க சாஸ்த்ரோக்தமாக எல்லாம் பண்ணுமாறு சொல்லிவிட்டார். அவரது ஆணைப்படியே எல்லாம் செய்யப்பட்டன.

அவருக்கு வருமானம் குறைவு. சுயதேவைகளுக்கான செலவினங்களும் குறைவு. அவர் சிக்கனக்காரர். ஆனால் மற்றவர்களுக்காக அவர் செலவுசெய்ததோ ரொம்ப ரொம்ப ஜாஸ்தி. அவரது அன்புத் தம்பியர் சிலர் அவருக்குத் தொடர்ந்து காணிக்கை செலுத்திவந்தனர். பிறருக்காக அவர் செலவுசெய்யும் விதம் எங்களுக்குச் சிரிப்பைத்தான் வரவழைக்கும். யாருக்குமே தகுதி பார்த்துச் செலவு செய்யும் பழக்கம் அவரிடம் இல்லை. ஒருமுறை சிறுகதைகளைப் பற்றிப் பேசும்போது அண்ணா என்னிடம், ‘ஒரு கதை நன்றாக இருக்கிறது, நன்றாக இல்லை என்று எப்படி அளவிடமுடியும்?’ என்று கேட்டார். ‘இதற்கெல்லாம் ஏதாவது அளவுகோல் உண்டா? அந்தக் கதையை எழுதிய நபருக்கு அந்தக் கதை பிடித்துத்தானே இருக்கிறது? அதைப்போலவே வேறுசிலருக்கும் அது பிடிக்கத்தானே செய்யும்?’ என்று அப்போது அவர் கூறினார். அதேபாணியை அவரது வாழ்க்கையிலும் பார்க்க முடிந்தது. தனக்குப் பிடித்தவர்கள், பிடிக்காதவர்கள், நல்லவன், கெட்டவன் என்று அவரிடம் எந்த அளவுகோலுமே தென்படவில்லை. பணஉதவி மட்டுமல்ல, எல்லாவகை அநுக்ரஹ விஷயத்திலும்தான். சொல்லப்போனால், இந்த உலகத்தின் பார்வையில் தகுதி இல்லாதவர்களுக்குத்தான் அவர் நிறையச் செய்திருக்கிறார்.

அண்ணாவின் செய்கைகளுக்குக் காரணம் யோசித்துப் பார்த்தால் பைத்தியம்தான் பிடிக்கும். 'For reasons best known to him, for reasons known only to him' என்பதுதான் அவரது செய்கைகளுக்கு என் மனதில் தோன்றும் ஒரே விளக்கம்.

அவரது உணவு ரொம்பவே குறைவானது. ஆனால் அவரது உடல்வலு ரொம்ப ஜாஸ்தி. அவரது முகத்தில் களைப்பைப் பார்க்க முடியாது. Ever fresh. உடல்நிலை மிக மோசமாக இருந்த காலத்தில்கூட, அவரது முகம் அன்றலர்ந்த மலர்போல இருக்கும். தனது தாங்கமுடியாத வயிற்றுவலியைப் பற்றி அவர் என்னிடம் நிறைய தடவை சொல்லியிருக்கிறார். ஆனால் அதைச் சொல்லும்போது சிரித்துக் கொண்டேதான் சொல்லுவார். எனக்கும் சிரிப்புதான் வரும்.

அவர் செய்யும் ஒவ்வொரு சிறிய பணி கூட ரொம்ப நேர்த்தியாக இருக்கும். அப்படி, பார்த்துப் பார்த்துப் பண்ணுவார். ஆனால், எந்த வேலையிலுமே அவர் மனம் ஒட்டவில்லை. தாமரை இலைத் தண்ணீர்போல என்பது அவருக்கு முழுக்கவே பொருந்தும்.

அண்ணா மிக உயரத்தில் இருந்தவர். ஆனால் எல்லோருக்கும் மிக நெருக்கத்திலும் இருந்தவர். அவரை உயர்ந்த இடத்தில் வைத்து யாராலும் பார்க்கவே முடியாது, மாறாக, மிக அண்மையில், மிகமிக அண்மையில் - அதாவது வெறும் அண்ணாவாக மட்டுமே - பார்க்க முடியும்.

அவரது புகைப்படங்கள் மிகவும் சொற்பமே. தன்னை அவர் வெளிப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. அதனாலேயே அவரைப் பற்றி (எழுதும் ஆர்வம் நிறைய இருந்தாலும்) எழுத வேண்டாம் எனத் தீர்மானித்தேன். ஸ்வாமி ஓங்காராநந்த ‘அண்ணாவைப் பற்றி எழுது’ என்று பணித்ததாலேயே இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். அண்ணாவே அவர் மூலம் ஆணையிட்டதாக என் மனம் கருதுகிறது.

நான் வெறும் வ்யாபார விஷயங்களிலேயே பெரிதும் ஈடுபட்டிருப்பதால் அண்ணாவின் கடைசி காலங்களில் அவரிடம் செல்வது பெரிதும் குறைந்துபோய்விட்டது. அந்தக் குறையை நிறைவுசெய்வதுபோல, சிவராத்திரி முதல் தற்சமயம்வரை மனம் முழுவதும் அவரைப் பற்றிய சிந்தனை மட்டுமே ப்ரதானமாக ஓடுகிறது.

அவர் **இருந்தார்,** இப்போது **இல்லை** என்ற எண்ணம் கொஞ்சம்கூட இல்லை. மாறாக, கொஞ்சகாலம் என்னைத் தன்னுடன் இருக்க அனுமதி அளித்திருந்தார் என்ற மகிழ்ச்சியே மேலோங்கி நிற்கிறது.

**– அண்ணாவின் அன்புத் தம்பியரில் ஒருவன்**